**13.03.2023**

**பெயர் : ஹசினாஹசன்**

## O.S. 100/2018 (D.W.01 )

குறுக்கு விசாரணை

நாங்கள் சநதோஷ்குமாரிடம் இருந்து முதன்முதலில் சொத்தை வாங்கியவர் என்றால் சரிதான். வழக்கு பற்றிய விவரங்கள் எனக்கு தெரியும். வாதி என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியும். வாதி என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார என்றால் நாங்கள் வாதிக்கு தெரியாமல் அவர் இடத்தை கிரையம் செய்ததாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். வாதி பாகபிரிவினை வழக்குதான் தாக்கல்செய்தள்ளார் என்றும் அதை பற்றி எனக்கு தெரியாது என்றால் வாதிக்கு பாகம் உள்ளது எங்களுக்கு தெரியாது. சின்னசாமி என்பவர் சந்தோஷ்குமாரின் தந்தை. சின்னசாமி பாப்பாத்தியின் கணவர் என்றால் எனக்கு தெரியாது நாஙகள் பார்க்கும்போது அவர் பெயர் எங்கும் இல்லை. நான் சின்னசாமியை பார்த்ததில்லை. சின்னசாமிதான் பாப்பாத்தியின் கணவர் என்றும் நான் நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சின்னசாமி எப்பொழுது இறந்தார் என்று எனக்கு தெரியாது. சின்னசாமி 19.02.2016 ல் இறந்தார் என்றும் 16.08.2016 ல் வாதி வாரிசு சான்றிதழ் வாங்கியுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. சந்தோஷ்குமார் என்பவர் இந்த நீதிமன்றத்திற்கு ஆஜராகவில்லை என்று சொன்னால் எனக்கு தெரியாது. சந்தோஷ்குமார் பொய்யான ஒரு வாரிசு சான்றிதழ் வாங்கியதால்தான் அவர் நீதிமன்றத்திற்கு ஆஜராகவில்லை என்றால் சரியல்ல அவர் வாரிசு சான்றிதழ் வைத்துள்ளார். பாப்பாத்திக்கு தாவா சொத்தில் உரிமை இல்லை என்று எதை வைத்து கூறுகிறேன் என்றால் நாங்கள் சொத்து வாங்கும்போது பட்டா, சிட்டா எதிலும் அவர் பெயர் இல்லை, வாரிசு சான்றிதழிலும் அவர் பெயர் இல்லை. தாவா சொத்திற்கு 30 லட்சம் கிரைய தொகை கொடுத்தோம். கிரைய பத்திரத்தில் 25 லட்சம் என்றுதான் குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான். பதிவு கட்டணத்தையும் சேர்த்துதான் 30 லட்சம் என்று கூறினேன். தாவா சொத்தின் சந்தை மதிப்பு எனக்கு தெரியுமா என்றால் தெரியாது என் கணவருக்குதான் தெரியும். நான் வருமானவரி கட்டுகிறேனா என்றால் இல்லை என் கணவர் கட்டுகிறார். தாவா சொத்து 11-1/2 சென்ட் விஸ்தீரனம் என்றால் சரிதான். அங்கு 1 சென்ட் 5 லட்சம் வீதம் தாவா சொத்தின் மதிப்பு 55 லட்சத்திற்கு மேல் இருக்கும் என்றும் 1, 2 பிரதிவாதிகள் குடிபழக்கத்திற்கு அடிமையானதால் குறைந்த விலைக்கு

விற்குவிட்டார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தை வாங்கும்போது நான் நேரில் பார்த்தேன். அங்கு அருகில் இருக்கும் பாருக்பாய் என்பவர் நீதிமன்றத்தில் வழக்கு உள்ளது என்று சொன்னாரா என்றால் இல்லை. பதிவு அலுவலகத்திலும் நீதிமன்றத்தில் வழக்கு உள்ளது என்று கூறினார்களா என்றால் இல்லை. நீதிமன்றத்தில் வழக்கு உள்ள விவரம் எனக்கு தெரிந்தும் குறைந்த விலையில் சொத்து கிடைப்பது என்பதால் வாதியின் பாகத்தை அபகரிக்கவேண்டி வாங்கியுள்ளோம் என்றால் சரியல்ல. சார்பதிவலுவலகத்தில் கூறினார்கள் என்றும் பின்விளைவுகளை பார்த்துக்கொள்கிறோம் என்று கிரையம் பெற்றோம் என்றால் சரியல்ல. தற்பொழுது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள சொத்துதான் தாவா சொத்து என்றும் அதில் வாதி அறிவிப்பு வைத்து வேலி அமைத்துள்ளார் என்றால் இது தாவா சொத்து இல்லை. தாவா சொத்தில் ஏதேனும் அனுபோகம் செய்து வருகிறோமா என்றால் வரி செலுத்தி வருகிறோம். தாவா சொத்தில் பாப்பாத்திக்கு பாகம் உள்ளது என்றும் ஆனால் அது தெரியாமல் நாங்கள் 1,2 பிரதிவாதிகளிடம் கிரையம் வாங்கிவிட்டோம் என்றால் சரியல்ல அவர் பெயர் ஆவணங்களில் இல்லை. வாதியை பார்த்துள்ளேனா என்றால் கடந்த முறை நீதிமன்றத்தில்தான் பார்த்தேன். பாப்பாத்தியுடன் நான் போன் மூலம் பேசியுள்ளேன். பாப்பாத்தியுடன் சமாதானமாக போகலாம் என்று பேசினேனா என்றால் இல்லை. நான் போன்மூலம் வாதியிடம் பேசினேன் என்றும் என் வழக்கறிஞர் அலுவலகத்திலும் வைத்து பேசினேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் என் முதல் விசாரணையில் வாதிக்கு நான் கிரையம் வாங்கிய சொத்தை தவிர மற்ற சொத்தில் பாகம் உள்ளது என்று ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் மற்ற சொத்துக்களில் பாகம் இருப்பதை பொறுத்து எனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்றுதான் சொன்னேன். பாப்பாத்தி சின்னசாமியின் மனைவி என்றும் அவர்கள் இருவரும் ஒரே வீட்டில் வசித்துள்ளார்கள் என்றும் அதனால் அவருக்கு 3ல் 1 பாகம் உள்ளது என்று சொன்னால் அவ்வாறு ஆவணங்களில் இல்லை. தாவா சொத்தில் தற்பொழுது வாதிதான் வேலி அமைத்து அனுபோகத்தில் உள்ளார் என்று சொன்னால் சரியல்ல. நான் ஏமாந்து சொத்தை வாங்கிவிட்டேன் என்றும் வாதியின் பாகத்தை பொறுத்து எனக்கு எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.